Friedrich Filitz, 1804-1876

Captetown
77.75



பாமாலை 364 A பெந்தெகொஸ்தின் ஆவியே

1 பெந்தெகொஸ்தின் ஆவியே,
உம்மால் போதிக்கப் பட்டே,
கேட்போம் உன்னத ஈவே,
தூய மெய்யன்பே

2 அன்பு யாவும் சகிக்கும்,
தீதெண்ணாது சாந்தமும் ,
அது வெல்லும் சாவையும்;
அன்பை ஈயுமென்.

3 போதனையும் ஓய்ந்திடும்
பூரண அறிவிலும்;
அன்பே என்றும் நிலைக்கும்;
அன்பை ஈயுமேன்.

4 காட்சியால் விஸ்வாசமும்,
பூரிப்பால் நம்பிக்கையும்
ஓயும்! என்றும் ஒளிரும்
அன்பே, ஈயுமேன்

5 அன்பு விசுவாசமும்
நம்பிக்கை இம்மூன்றிலும்
ஒப்பற்ற மேலானதும்
அன்பே, ஈயுமேன்

6 தூய நேச ஆவியே,
உம்மைப் போற்றும் தாசர்க்கே
எங்கள் பேரில் அமர்ந்தே,
அன்பை ஈயுமேன்